सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2026 - 2027

## திரு ந. ரங்கசாமி

மாண்புமிகு முதலமைச்சர்




ஆகஸ்ட் 24, 2026

# வரவு - செலவுத் திட்ட உரை

# 2026 – 2027

**காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.**

**-குறள்**

அரசன், தன்னைக் காண வருபவர்க்கு எளியனாயும், கடுஞ்சொல் பேசாதவனாயும் இருப்பானாயின் அவன் நாட்டை உலகத்தார் உயர்த்திப் புகழ்வர்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**நா**ன் இந்த மாண்புமிகு பேரவையில் 2026-27ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். புதியதாக தேர்வு செய்யப்பட்டுள்ள பதினாறாவது சட்டமன்றத்தில் எனது முதல் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பது எனக்கு கூடுதல் மகிழ்ச்சியை அளிக்கிறது. 2026-27ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புகளின் பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பரிசீலனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

**2.** மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் ஒத்துழைப்பு மற்றும் முழுமையான ஆதரவுடன் பல்வேறு துறைகளில் குறிப்பாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக முன்னேற்றங்களை எட்டியுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் அடைந்த வெற்றியானது, கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் மத்திய அரசுடன் ஒன்றிணைந்து, நமது மாநிலம் வளர்ச்சிப்பாதையில் பயணிப்பதற்கு நாம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு மக்கள் நமக்கு அளித்த பேராதரவின் வெளிப்பாடாகும். இந்த சாதனைகள் மக்கள் நம்பிக்கையை வலுப்படுத்தி, நமது ஆட்சியின் தொடர்ச்சியை உறுதி செய்துள்ளன. மேலும், நாம் பெற்றுள்ள வெற்றி கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனைகளின் அங்கிகாரம் மட்டுமல்ல; வரும் காலங்களில் புதுச்சேரி மாநிலம் மேலும் பல வளர்ச்சிகளை எட்ட வேண்டும் என்ற பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பையும் வெளிப்படுத்துகிறது. இதனை கருத்தில் கொண்டு இந்த வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**3.** எனது அரசு, சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களின் குறிப்பாக நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அனைவரையும்

உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்துள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும் மேலும் பல நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மக்களுக்கு அரசு வழங்கி வரும் சேவைகளின் முறையை மேம்படுத்தி, துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு உறுதியான மற்றும் நிலையான வளர்ச்சியை அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்வதே எனது அரசின் நோக்கமாகும் என்பதை இந்த தருணத்தில் மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**4.** சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக, இந்த நிதியாண்டில், 01-04-2026 முதல் 31-08-2026 வரையிலான ஐந்து மாதங்களுக்கு உண்டான அரசின் அன்றாட செலவினங்களுக்காக இப்பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**5.** 2026-27ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 14,300 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வருவாய் வரவினங்கள் ₹ 7890.41 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியையும் உள்ளடக்கிய மத்திய நிதி உதவி ₹ 3517.86 கோடியாகும். மத்திய சாலை நிதி (Central Road Fund) ₹ 25 கோடி மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ்

(Centrally Sponsored Scheme) வழங்கும் நிதி ₹ 531.80 கோடியாக இருக்கும். நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக பேரம் பேசி வாங்கும் கடனையும் சேர்த்து ₹ 2148.69 கோடி வரை நிகரக் கடன் வரம்பிற்கு (Net Borrowing Ceiling) இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், மத்திய அரசின், மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி (Special Assistance to States for Capital Investment) திட்டத்தின் கீழ் ₹ 186.24 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**6.** இந்த 2026-27ஆம் நிதியாண்டிற்கான ₹ 14,300 கோடிக்கான வரவு-செலவுத் திட்டத்தில், ₹ 12,115 கோடி வருவாய் செலவினங்களுக்கும், ₹ 2,185 கோடி மூலதன செலவினங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனது அரசு, மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் அதே வேளையில், நமது மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதன் விளைவாக 2021-22ஆம் நிதியாண்டில் மொத்த செலவினங்களில் 1.66 விழுக்காடாக (₹ 162.78 கோடி) இருந்த மூலதன செலவீனம், 2026-27ஆம் நிதி ஆண்டில் 7.93 விழுக்காடாக (₹ 1134.58 கோடி) அதிகரித்துள்ளது. இதன்மூலம் மூலதன செலவீனம் கிட்டத்தட்ட ₹ 971.80 கோடி அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**7.** “மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு நிதி” (SASCI) திட்டத்தின்கீழ், மாநில அரசுகளுக்கு 50 ஆண்டுகள் வட்டியில்லா நீண்டகால கடன் மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எனது அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, 2025-26ஆம் நிதியாண்டில், புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கு ₹ 227.34 கோடி கடன் வழங்கப்பட்டதுடன், நடப்பு நிதியாண்டிற்கு ₹ 186.24 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளதை இந்த மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் நமது ஆட்சிப்பரப்பின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு நமது மாநில வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

**8.** அரசின் நிதி வளங்களில் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் போன்ற தவிர்க்க முடியாத செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுவது மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2026-27ஆம் ஆண்டிற்கான ₹ 14,300 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளத்திற்காக ₹ 2,693.40 கோடி (18.83%), ஓய்வூதியத்திற்காக ₹ 1,619.73 கோடி (11.33%), கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதலுக்காக ₹ 1,981.57 கோடி (13.86.%) மற்றும் மின்சாரம் கொள்முதல் செய்வதற்காக ₹ 2,327.86 கோடி (16.28%) ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசின் முக்கிய செலவினங்களான முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியம், குடும்பத் தலைவிக்கு நிதியுதவி, விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம், இலவச அரிசி மற்றும் கோதுமை வழங்குதல், சமையல் எரிவாயு மானியம், மாணவர்களுக்கான இலவச மடிக்கணினி வழங்குதல் மற்றும் பல முக்கிய நலத்திட்டங்களுக்காக ₹ 2202.45 கோடி (15.40%) ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான மானிய உதவியாக ₹ 560 கோடி (3.92%) மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்காக ₹ 1,082 கோடி (7.57%) ஒதுக்கப்பட்டுள்ளது.

**9.** 2026-27ஆம் நிதியாண்டில் சிறப்பு நிதி அமைப்புகளுக்காக ₹ 3070.04 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் சிறப்பு நிதியமைப்பிற்காக ₹ 1676.89 கோடியும், இளைஞர் சிறப்பு நிதியமைப்பிற்காக ₹ 647.84 கோடியும், பசுமை சிறப்பு நிதியமைப்பிற்காக ₹ 745.31 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**10.** எனது அரசு, முதன் முறையாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நீண்டகால செயல்வரைபடத்துடன் கூடிய விரிவான முதன்மை உள்கட்டமைப்பு திட்டம் ஒன்றை தயாரிக்க உத்தேசித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் சாலைகள், பாலங்கள், பொது இடங்கள், நீர் வழங்கல், கழிவுநீர் அமைப்பு,

வடிகால் அமைப்பு, தொலைத்தொடர்பு பயன்பாட்டு வழித்தடங்கள், மாநாட்டு மையங்கள், சுற்றுலா உள்கட்டமைப்பு, பாரம்பரியக் கட்டமைப்புகள் மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு துறைகளில் உள்ள உள்கட்டமைப்புத் திட்டங்களை அடையாளம் கண்டு முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்தப்படும். இத்திட்டம், ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சியில் நிபுணத்துவம் வாய்ந்த புகழ்பெற்ற ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் மூலம் தயாரிக்கப்படுவதால், இவ்வாட்சிப்பரப்பின் உள்கட்டமைப்புத் தேவைகள், நிலையான மற்றும் எதிர்கால நோக்குடன் நிறைவேற்றப்படுவது உறுதி செய்யப்படும்.

**11.** எனது அரசு, நவீன மின்னணு தொழில்நுட்பம் மூலம் பொது நிதி மேலாண்மையை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் "இ–குபேர்" (e-Kuber) வங்கிச் சேவையுடன் இணைந்து மின்னணு கட்டண முறை (e-Payment) பாதுகாப்பான மற்றும் எளிய முறையில் நிதி பரிமாற்றம் நடைபெற்று வருகிறது. அரசின் வரவுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், அரசின் வருவாய்களை நிகழ் நேர அடிப்படையில் உடனுக்குடன் கணக்கீட்டு கண்காணிக்கவும் "இ–குபேர்" (e-Kuber) வங்கிச் சேவையுடன் இணைந்து மின்னணு வரவு முறையையும் (e-Receipt) செயல்படுத்த

எனது அரசு உத்தேசித்துள்ளது. மேலும், அரசுத் துறைகளில் காகிதமில்லா முறையில் சம்பளம் மற்றும் பிற செலவினங்களுக்கான பட்டியல்களுக்கு (other bills) மின்னணு முறையை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**12.** ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு என்பது நமது எதிர்காலத்தை வடிவமைக்கும் சக்தி. விவசாயம், கல்வி, தொழில், மருத்துவம் மற்றும் ஏனைய துறைகளில் முன்னேற்றம் வேண்டும் என்றால் ஆராய்ச்சி முக்கியம். அரசுத் துறைகளில் புதிய முயற்சிகள் மூலம் அறிவியல் அடிப்படையிலான மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை கொண்டு வரும் பொருட்டு இந்த நிதியாண்டு முதல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக தனி கவனம் செலுத்தப்படும். நடப்பு நிதியாண்டில் இதற்கென ₹ 10.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆட்சிமுறை, நிர்வாகத் திறன் மற்றும் பொதுச் சேவை வழங்கல் மேலும் வலுப்படுத்தப்படுவதுடன், அரசு துறைகளில் தொடர்ச்சியான புதுமைகளும் ஊக்குவிக்கப்படும்.

**13.** இந்த முன்னுரையுடன், 2026-27ஆம் ஆண்டிற்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்**

**14.** எனது அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக ₹ 642.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15.** தகுதியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தடையின்றி கல்வி கற்று, கல்வியில் முன்னேற்றம் அடைய அவர்களுக்கு அளித்து வரும் கல்வி உதவித்தொகையை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இத்துறையின் அனைத்து நலத்திட்டங்களும் பொதுமக்களுக்கு திறம்பட, வெளிப்படைத் தன்மையுடன், அவர்களுக்கு ஏற்ற வகையில் கிடைப்பதற்கு ஏதுவாக மின்னணுமயமாக்கப்படும்.

**16.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு முழுமையான கல்விக் கட்டணம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2025-26 ஆம் நிதியாண்டில் 1-ஆம் வகுப்பு முதல் முதுநிலைப் பட்டப்படிப்பு வரை படிக்கும் சுமார் 12,000 மாணவர்களுக்கு ₹ 80 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ், சுமார் 15,000 மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

**17.** எனது அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் டி.என். பாளையம், மணப்பட்டு, அபிஷேகப்பாக்கம், ஏரிப்பாக்கம் மற்றும் கரையாம்புத்தூர் கிராமங்களில் நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சுமார் 486 பயனாளிகளுக்கு இலவச மனைப்பட்டா வழங்கியுள்ளது. இருளன்சந்தை, அரியூர், சுத்துக்கேணி கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாண்டு இலவச வீட்டு மனைகள் வழங்கப்படும். மேலும், நடப்பு நிதியாண்டில், கோர்க்காடு கிராமத்தில் நிலமற்ற பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18.** பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான நிதியுதவி ₹ 5 இலட்சத்திலிருந்து ₹ 7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 1,150 பயனாளிகளுக்கு ₹ 15.95 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 2,500 பயனாளிகளுக்கு ₹ 29.15 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19.** புதுச்சேரி ஆதிதிராவிடர் மேம்பாட்டு கழகம் மூலம் ஏழை மற்றும் மதிப்பெண்களில் சிறந்து விளங்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமைப்பணிகளின் தேர்வுக்கான இலவச பயிற்சி வழங்கும் திட்டம், புகழ்பெற்ற பயிற்சி நிறுவனம் மூலம் இரண்டு மாத காலத்திற்குள் தொடங்கப்படும்.

**20.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடையே உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில், புதுச்சேரி பிராந்தியத்தின் தட்டாஞ்சாவடி மற்றும் இலாஸ்பேட்டை பகுதிகளில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 120 மாணவர்கள் தங்கக்கூடிய இரண்டு புதிய விடுதிகள் கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கரையாம்புத்தூர் மற்றும் கோவில்பத்து பகுதிகளில் தலா ஒரு மாணவர் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**21.** முதல்வரின் புதுமைப்பெண் மின்சார இருசக்கர வாகனம் மற்றும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் மின்சார ஆட்டோ திட்டத்திற்கான மானியம் வழங்கும் திட்டங்களின்கீழ், கடந்த நிதியாண்டில் முறையே 100 மின்சார இருசக்கர வாகனங்களும், 5 மின்சார ஆட்டோக்களும் வழங்கப்படுள்ளன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ், 250 மின்சார இருசக்கர வாகனமும், 50 மின்சார ஆட்டோக்களும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த நிதியாண்டில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பஞ்சரத்னா தளங்களுக்கு யாத்திரை

மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 70 பயனாளிகள் யாத்திரை மேற்கொண்டனர். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ், அதிக எண்ணிக்கையிலான பயனாளிகள் பயன்பெறும் வகையில் அதிகபட்ச வயது வரம்பு 70ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**22.** வன்கொடுமையால் உயிரிழந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அரசு அல்லது அரசின் பொதுத்துறை நிறுவனத்தில் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான மாதிரி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**23.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள கோயில்களின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு பணிக்கான நிதியுதவி ₹ 3.50 இலட்சத்திலிருந்து ₹ 10 இலட்சமாக உயர்த்தப்பட்டு நடப்பு நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும். புதுச்சேரி குபேர் அவன்யூவில் அமைந்துள்ள டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மணிமண்டபத்தை சுமார் ₹ 2 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

**24.** நமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றுக்கு வேளாண்மையே ஆதாரமாக உள்ளது. நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, மக்களுக்கு வேலைவாய்ப்பினையும் தொழில் துறைக்குத் தேவையான மூலப்பொருட்களையும் வேளாண்மை வழங்குகிறது.

பயிர்கள் மற்றும் பண்ணை உற்பத்தித்திறனை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கு எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

**25.** மத்திய அரசின் பயறு வகைகளில் தன்னிறைவு இயக்கம் (Mission on Atmanirbharta in Pulses) என்ற திட்டத்தின்கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் முறையே 1,000 மற்றும் 500 ஹெக்டேர் பரப்பளவிற்கு சாகுபடி செய்யும் வகையில் அதிக மகசூல் தரும் உயர் ரக பயறு வகைகளின் விதைகள் வழங்கப்படும். இதன்மூலம் பயறு வகைகளின் சாகுபடி அதிகரித்து விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். மேலும், தேசிய எண்ணெய் வித்துக்கள் இயக்கத்தின்கீழ் (National Mission on Edible Oils) 550 ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி மேற்கொள்ளும் வகையில் அதிக மகசூல் தரும் நிலக்கடலை விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் பொருட்டு சிறிய அளவிலான பயறு அரவை ஆலைகள் மற்றும் எண்ணெய் ஆலைகள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படும். தேசிய வேளாண் இயந்திரமயமாக்கல் இயக்கத்தின்கீழ், (National Mission on Agriculture Mechanization), வேளாண் பணிகளில் ட்ரோன்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிப்பதற்காக வேளாண் அறிவியல் நிலையங்களுக்கு இரண்டு ட்ரோன்கள் வழங்கப்படும்.

**26.** மத்திய அரசின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இவ்வாட்சிப்பரப்பில் இயற்கை முறையில் விளைவிக்கப்படும் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கான தேவையை கருத்தில் கொண்டு மஞ்சள் பதப்படுத்தும் நிலையம் அமைக்க நிதியுதவி வழங்கப்படும். விளைச்சல் குறைவாக இருக்கும் பருவங்களில் விவசாயிகளின் வருமானத்தை பாதுகாக்கும் வகையில், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை தடுக்கும் நோக்கில், சூரிய ஆற்றலில் இயங்கும் பயிர் உலர்த்தும் கருவிகள் (Solar Crop Dryer) வாங்க நிதியுதவி வழங்கப்படும்.

**27.** எனது அரசு, விவசாயிகளின் நலனில் அதிக அக்கரை செலுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். காரைக்கால் பிராந்தியத்தில் விவசாயிகள் வேளாண்மைக்கு காவேரி நீரை பெறுமளவில் சார்ந்துள்ளனர். கோடைக்காலத்தில் காவேரி நீர் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளதால் விவசாயிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனை கருத்தில் கொண்டு எனது அரசு, காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ₹ 1,500 வீதம் கோடை உழவுக்கான

நிதி உதவி வழங்க உத்தேசித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் ஆண்டுக்கு ₹ 1.13 கோடி செலவீனம் ஏற்படும்.

**28.** தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், (Rashtriya Krishi Vikas Yojana), காரைக்காலில் உள்ள பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த முன்னோடி மையம் மற்றும் விவசாய இயந்திரங்களுக்கான தனிப்பயன் வாடகை மையம் அமைக்கப்படும். செயல்விளக்கங்கள் மற்றும் களப் பயணங்கள் மூலம் 8,500 பயனாளிகளுக்கு விவசாயத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

**29.** பேரிடர் காலங்களில் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு தற்போது பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா (Pradhan Mantri Fasal Bima Yojana) திட்டத்தின்கீழ், 20,500 விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகையை மாநில அரசே ஏற்றுவருகிறது. இத்திட்டத்தினை விவசாயிகள் பயன்பெறும் வகையில் எளிதாக்க இணையவழி பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**30.** இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பாரம்பரிய விவசாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், (Paramparaghat Krishi Vikas Yojana) 200 ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கும் வகையில் 10 புதிய குழுக்களும், தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்தின்கீழ், (National Mission on Natural Farming) 100 ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கும் வகையில் இரண்டு புதிய குழுக்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பருவகாலப் பயிர்க்கடன்களை எளிதாகப் பெறுவதற்காக ஒருங்கிணைந்த கடன் இணையதள உள்கட்டமைப்பு (Unified Loan Interface Portal) அறிமுகப்படுத்தப்படும்.

**31.** வேளாண் துறையின் அனைத்து சேவைகளும் முழுமையாக இணையவழியில் வழங்கப்பட்டு, சேவைகளின் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்திய தரநிலைகள் பணியகம் வழங்கும் ISO 37001:2016 ஊழல் தடுப்பு மேலாண்மைச் சான்றிதழை பெற்றுள்ளோம். இச்சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் ஒரே அரசு துறையாக, இத்துறை பெருமையுடன் திகழ்கிறது என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**32.** 2026-27 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைக்காக ₹ 178.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**33.** கால்நடைப் பராமரிப்பு என்பது கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், விவசாயிகளுக்கு நிலையான வருவாய் ஈட்டித் தருவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பால், முட்டை மற்றும் இறைச்சி போன்ற சமச்சீரான ஊட்டச்சத்துக்களை வழங்கும் கால்நடை வளர்ப்பிற்கு எனது அரசு முக்கியத்துவம் அளித்து உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**34.** தரமான பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பால் கறப்பதில் உள்ள ஆள்பற்றாக்குறையை குறைக்கவும், ₹ 75 இலட்சம் மதிப்பீட்டில் 150 பயனாளிகளுக்கு நவீன பால் கறக்கும் இயந்திரங்கள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மேலும், பால் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் அல்லாத கால்நடை விவசாயிகளுக்கு, 75 விழுக்காடு மானியத்தில் 3,450 கறவைப் பசுக்களுக்கு மாட்டுத் தீவனம் மற்றும் 4,000 கன்றுகளுக்கு கன்றுத் தீவனம் வழங்கப்படும்.

**35.** கன்றுக்கு ₹ 1,500 வீதம் 4 முதல் 8 மாத வயதுடைய அனைத்துப் பெண் கன்றுகளுக்கு இலவச காப்பீடு வழங்கப்படும். கால்நடை ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், கால்நடை விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பு முழுவதும் மருத்துவ முகாம்கள் மற்றும் செல்லப் பிராணிகள் கண்காட்சிகள் நடத்தப்படும்.

**36.** விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு (i) கடக்நாத் மற்றும் சோனாலி போன்ற 48,000 நாட்டுக்கோழிகள், (ii) 18 வார வயதுடைய முட்டையிடும் கோழிகள், தீவனம் மற்றும் கூண்டு கொண்ட தொகுப்பு; மற்றும் (iii) 8 வார வயதுடைய 25,000 வான்கோழிகள் வழங்கப்படும்.

**37.** புதுச்சேரி பிராந்தியத்தின் காட்டேரிக்குப்பம் மற்றும் ஆலங்குப்பம் பகுதியில் ஒரு சிறிய கால்நடை மருந்தகமும், காரைக்கால் பிராந்தியத்தின் வரிச்சிகுடியில் ஒரு கால்நடை அபிவிருத்தி கிளை நிலையமும் கட்டப்படும். மேலும், இவ்வாட்சிப்பரப்பில் அமைந்துள்ள கால்நடை மருந்தகங்கள் புனரமைக்கப்படும்.

**38.** 2026-27 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறைக்காக ₹ 85.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கலை மற்றும் பண்பாடு**

**39.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு இந்திய பாரம்பரியமும் பிரெஞ்சு மரபும் இணைந்த தனித்துவமான கலாச்சார மையமாகும். இவ்வாட்சிப்பரப்பின் கலை மற்றும் பண்பாடு என்பது பாரம்பரியம் மற்றும் நவீனத்துவத்துடன் கொண்ட உயிரோட்டமான ஓவியமாகும். நமது மாநிலத்தின் கலாச்சார நிகழ்வுகளை மேம்படுத்த எனது அரசு, தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**40.** எனது அரசு, அனைத்து அரசு கிளை நூலகங்களையும் நவீனப்படுத்தி அறிவுசார் மையங்களாக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. பொதுமக்கள் அனைவருக்கும் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு புத்தகங்கள் மற்றும் கல்வி வளங்கள் எளிதில் கிடைக்கும் வகையில் நடமாடும் நூலகங்கள் அறிமுகப்படுத்தப்படும். மேலும், பொதுமக்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, தங்களது புத்தகங்களை அமைதியான சூழலில் படிப்பதற்காக சிறப்பு வாசிப்புப்பகுதிகள் அமைக்கப்படும்.

**41.** இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றிபெறவும், சிறந்த வல்லுநர்களை கொண்டு

பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். குழந்தைகளின் படைப்பாற்றல் மற்றும் கற்றல் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு கல்விசார் திரைப்படக் காட்சிகள் நடத்தப்படும். மேலும், கலாச்சார மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக காமராஜர் மணிமண்டபத்தில் அமைந்துள்ள நவீன திறந்தவெளி அரங்கம் பயன்படுத்தப்படும். புதுச்சேரியின் வரலாறு மற்றும் தலைவர்களின் பங்களிப்புகளை எடுத்துரைக்கும் விதமாக கிராமப்புறங்களில் கண்காட்சிகள் நடத்தப்படும்.

**42.** தமிழ் பண்பாடு, இலக்கியம் மற்றும் உலகளாவிய தமிழறிஞர்களின் ஆய்வுகளைக் கொண்டாடும் வகையில் உலகத் தமிழ் மாநாடு புதுச்சேரியில் நடத்தப்படும் என்பதை ஏற்கனவே கூறியிருந்தோம். இதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், தமிழ்ச் சொற்பிறப்பியல் துறையில் மேம்பட்ட ஆய்வுகளை ஊக்குவிப்பதற்கும், தமிழ்மொழியின் மொழியியல் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கும், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சொற்பிறப்பியல் ஆய்விற்கான தமிழ் இருக்கை நிறுவப்படும். வரலாற்று மற்றும் நிர்வாக ஆவணங்களை பாதுகாக்கவும் மற்றும் வருங்கால சந்ததியினர் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அவற்றை டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**43.** பாரதியார் பல்கலைக்கூடத்தில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும். மாணவர்களின் கல்வி மற்றும் பண்பாட்டு அனுபவத்தை விரிவுபடுத்தும் வகையில் மாணவர் பரிமாற்றுத் திட்டம் தொடங்கப்படும். மேலும், இக்கல்வி நிறுவனத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**44.** 2026-27ஆம் ஆண்டில் கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்காக ₹ 40.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**45.** எனது அரசு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் சமூகங்களின் நலனில் கவனம் செலுத்தி வருகிறது. நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் இவர்களின் பங்களிப்பை உணர்ந்து சமமான வாய்ப்புகளை உறுதி செய்வது அவசியமாக கருதப்படுகிறது.

**46.** எனது அரசு, பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவர்கள் தேசிய அளவில் முன்னணி கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு பள்ளிகளில் NEET மற்றும் JEE போன்ற போட்டி தேர்வுகளுக்காக பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், குடிமைப் பணி, வங்கிப் பணி

மற்றும் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் வகையில் பயிற்சி வழங்கப்படும். இதன்மூலம், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் அதிக பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்யப்படும்.

**47.** சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த கைவினைஞர்களுக்காக, அவர்களின் இயல்பான திறமைகளை மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும், சிறுபான்மைப் பெண்களின் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.

**48.** சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும், சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான ஆதரவு வழங்கப்படும். சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும், புதுச்சேரியின் தனிச்சிறப்பான மத நல்லிணக்கத்தை நிலைநிறுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

49. 2026-27ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்காக ₹ 16.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

50. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பொது விநியோகத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆதார் எண்ணை பயன்படுத்தி டிஜிட்டல் முறையில்(e-KYC) குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள் தற்பொழுது துல்லியமாக சரிபார்க்கப்படுகின்றன. இதன்மூலம் நலத்திட்டப் பயன்கள் உரியவர்களுக்கு சென்றடைவது உறுதி செய்யப்படும். பொதுமக்களின் வசதிக்காக, குடும்ப அட்டை தொடர்பான பல்வேறு சேவைகள், பொது சேவை மையங்கள் மூலம் இணையவழியில் வழங்கப்பட்டு வருகின்றன.

51. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், (NFSA) முன்னுரிமை பெற்ற குடும்பங்கள் (PHH) மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு, “பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா” (PMGKAY) திட்டத்தின்கீழ், அரிசிக்கு பதில் பணம் கணக்கிடப்பட்டு நேரடிப் பணப்பரிமாற்ற முறையில் (DBT)

பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆதார், குடும்ப அட்டை மற்றும் வங்கிகளுக்கு இடையிலான தரவுப் பொருத்தமின்மையால் இதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், பணப் பரிமாற்றத்திற்குப் பதிலாக மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தை பயன்படுத்தும் முறையை புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. இதன்மூலம் பயனாளிகள் தங்களுக்குரிய ஒதுக்கீட்டின்படி உணவு தானியங்களை அங்கீகரிக்கப்பட்ட மளிகைக் கடைகளில் வாங்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும். முதல் கட்டமாக, 1,02,470 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகளின் கீழ் உள்ள 3,49,960 பயனாளிகள் பயன்பெறுவர்.

**52.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் அரிசியின் அளவை மாற்றியமைத்து, அரிசியுடன், கோதுமை மாவு, துவரம் பருப்பு, கேழ்வரகு மாவு, சர்க்கரை மற்றும் நெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை தொகுப்பாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**53.** 2026-27ஆம் ஆண்டில் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறைக்காக ₹ 461.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**54.** விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு ஆதரவளிப்பதில் கூட்டுறவு இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவு நிறுவனங்களை வலுப்படுத்தி, இவ்வாட்சிப்பரப்பின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பை உறுதி செய்வதில் எனது அரசு உறுதிபூண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**55.** தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பாண்லே நிறுவனத்தில் முழுமையான தானியங்கி வசதி கொண்ட தினமும் இரண்டு இலட்சம் லிட்டர் பாலை (2 LLPD) சுத்திகரித்து, பேக்கிங் செய்யும் திறன் கொண்ட பால் பண்ணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பால் கொள்முதலை அதிகரிக்க கிராமப்புற அளவில் பால் கூட்டுறவு சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாண்லே நிறுவனத்தின் அனைத்து பால் விற்பனை நிலையங்களையும் பொதுமக்கள் வசதிக்கு ஏற்ப நவீனமயமாக்கப்படும்.

**56.** புதுச்சேரி அரசு கூட்டுறவு நிறுவனமான பாண்லே மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலின் விலையினை, பாலின் தரத்தின் அடிப்படையில் உயர்த்தி, அதிகபட்சமாக லிட்டருக்கு ₹ 41 வரை ஊக்கத்தொகை உட்பட வழங்கப்படும்.

**57.** புதுச்சேரி நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுந்து, சமையல் எண்ணெய், சர்க்கரை மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் அடக்க விலையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரியின் முக்கிய 10 இடங்களில் சிறிய அடக்க விலைக் கடைகள் அமைக்கப்படும்.

**58.** புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கியில் RTGS மற்றும் NEFT வசதிகள் அறிமுகப்படுத்தப்படும். 1,000 விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டை (KCC) வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், நெட்டப்பாக்கம் மற்றும் சுல்தான்பேட்டையில் வங்கியின் புதிய கிளைகள் தொடங்கப்படும். புதுச்சேரி மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையம், முத்துப்பிள்ளைப்பாளையத்தில் ₹ 75 கோடி மதிப்பீட்டில் 75 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தை கட்ட திட்டமிட்டுள்ளது.

**59.** 2026-27ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறைக்காக ₹ 62.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்**

**60.** புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் சமூக மற்றும் பொருளாதாரக் குறியீடுகளை உருவாக்குவதிலும், வளர்ச்சித் திட்டங்களுக்கு தேவையான புள்ளிவிவரங்களை வழங்குவதிலும் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை முக்கிய பங்காற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்துறையை மேலும் வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**61.** தேசிய மாதிரி கணக்கெடுப்பின்கீழ், உள்நாட்டு சுற்றுலா செலவுக் கணக்கெடுப்பு மற்றும் இடப்பெயர்வு கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. விவசாய புள்ளியியல் தரவுகளின் துல்லியத்தை உறுதிபடுத்தும் வகையில் காரீப் (Kharif) மற்றும் ராபி (Rabi) பருவங்களில் பரப்பளவு கணக்கெடுப்பு மற்றும் பயிர் வெட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படும்.

**62.** 2026-27ஆம் ஆண்டில் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறைக்காக ₹ 6.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்துறை**

**63.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு, பாதுகாப்பான மற்றும் தரமான மின்சார

விநியோகம் இன்றியமையாதது ஆகும். தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்கும், மின் உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கும் எனது அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**64.** இலாஸ்பேட்டை பகுதியில் ₹ 78.80 கோடி மதிப்பீட்டில் 50 மெகாவோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட புதிய 110/22 கிலோவோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதேபோல், ₹ 92.26 கோடி மதிப்பீட்டில் தவளக்குப்பத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும், திருபுவனையில் தற்போது உள்ள துணை மின் நிலையத்திற்குப் பதிலாக ₹ 60 கோடி மதிப்பீட்டில் புதிய 110/22 கிலோவோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

**65.** அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தொண்டமானத்தம் துணை மின் நிலையத்தில் ₹ 26.14 கோடி செலவில் கூடுதலாக 100 மெகாவோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட மின்மாற்றி நிறுவப்பட்டு வருகிறது. மேலும், கோர்க்காடு, தேத்தாம்பாக்கம் மற்றும் காலாப்பட்டு துணை மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை ₹ 17.70 கோடி

செலவில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் மின்சாரத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மை மேலும் உயர்த்தப்படும்.

**66.** மின் ஆற்றலைச் சேமித்து தேவைப்படும்போது அதை விநியோகிக்க, ₹ 150 கோடி மதிப்பீட்டில் 50 மெகாவாட் திறனுடைய மின்கல சேமிப்பு அமைப்பை (Battery Energy Storage System) நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 துணை மின்நிலையங்களில் தலா 5 மெகாவாட் திறன்மிக்க மின்கல சேமிப்பு அமைப்பு நிறுவப்படும். தெலுங்கானாவில் அமையவுள்ள தேசிய அனல் மின் நிலையத்தின் இரண்டாம் கட்ட மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 50 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**67.** 2026-27ஆம் ஆண்டில் மின்துறைக்காக ₹ 2740.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**68.** அவசரநிலைகள் மற்றும் பேரிடர் காலங்களில் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதில் தீயணைப்புத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை வலுப்படுத்தும் வகையில்

உள்கட்டமைப்புகள், உபகரணங்கள் மற்றும் அவசரகால பதிலளிப்பு அமைப்புகளை நவீனப்படுத்த எனது அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**69.** புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் அவசரகால மீட்புத் திறனை மேம்படுத்தும் வகையில் மேம்பட்ட தீயணைப்பு வாகனங்கள், சிறிய தீயணைப்பு வாகனங்கள் (Mini Fire Tenders), விரைவு அவசரகால பதிலளிப்பு வாகனங்கள் (Quick Response Vehicles) மற்றும் பிற சிறப்பு மீட்பு வாகனங்களை நடப்பு நிதியாண்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**70.** மேலும், தீயணைப்பு நிலையங்களுக்காக தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் (Personal Protective Equipment), மேம்பட்ட சுவாசக் கருவிகள் (Advanced Breathing Apparatus), பேரிடர் மேலாண்மைக் கருவிகள், மீட்புப் படகுகள் மற்றும் கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட நவீன தீயணைப்பு மற்றும் உயிர் காக்கும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும். இதன்மூலம் மீட்புப் பணிகள் மேலும் வலுப்படுத்தப்படும். இதற்காக நடப்பு நிதியாண்டில் ₹ 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**71.** தீயணைப்புத் துறையின் உள்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், புதுச்சேரி–தன்வந்திரி நகரில் கோட்ட தீயணைப்பு அதிகாரி அலுவலகக் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படும். மேலும், புதிதாக நியமிக்கப்பட்ட பெண் தீயணைப்புப் பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு தீயணைப்பு நிலையங்களில் பெண்களுக்கான தங்குமிடங்கள் (Women's Barracks) மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**72.** 2026-27ஆம் ஆண்டில் தீயணைப்புத் துறைக்காக ₹ 44.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**73.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சிக்கும், கடலோர மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் மீன்வளம் முக்கிய பங்காற்றி வருகிறது. எனது அரசு, மீனவ குடும்பங்களின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**74.** நடப்பு நிதியாண்டில் புதியதாக 1,000 மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு "முதியோர் ஓய்வூதியம்" வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**75.** மத்திய அரசின் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (PMMSY), மீன்வளக் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துள்ள வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள (BPL) பாரம்பரிய மீனவர்களுக்கு, வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆதரவிற்காக ₹ 3,000 மத்திய அரசு பங்காக வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் இத்திட்டம் செயல்பாட்டில் இருக்கும்வரை, மாநில அரசின் நிதியைக் கொண்டு இத்திட்டம் அனைத்து மீனவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**76.** பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (PMMSY), ₹ 1.60 கோடி மதிப்புடைய ஆழ்கடல் மீன்பிடி படகுகள் வாங்குவதற்கு பெண் மீனவ பயனாளிகளுக்கு 30 விழுக்காடு மானியமும், ஆண் மீனவ பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு, ₹ 40.00 இலட்சம் மதிப்பிலான மீன்பிடி வலைகள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

**77.** ஆழ்கடல் மீன்பிடி தொழில் முனைவோர்கள் மற்றும் மீனவர்களுக்கு, ஒரு கோடி செலவில் படகு கட்டும் தளம் (Boatyards) அமைப்பதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு ₹ 7,500 மதிப்புடைய குளிரூட்டும் பெட்டிகள் (Ice Box) இலவசமாக வழங்கப்படும். மேலும், புதியதாக மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபடும் 60 புதிய மீன் வளர்ப்போருக்கு உள்ளீட்டு மானியம் வழங்கப்படும்.

**78.** 2026-27ஆம் ஆண்டில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறைக்காக ₹ 178.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வனம் மற்றும் வனவிலங்கு

**79.** வனங்கள் மற்றும் வனவிலங்குகள் நமது இயற்கையின் அடையாளங்களாக மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் சமநிலை, பல்லுயிர் பெருக்கம் மற்றும் காலநிலை நிலைத்தன்மையை உறுதிபடுத்தும் முக்கியமான இயற்கை வளங்களாகும். வருங்கால தலைமுறையினருக்கு வளமான இயற்கைச் சூழலை உருவாக்கித் தருவது அரசின் முக்கியக் கொள்கைகளுள் ஒன்றாகும்.

**80.** நமது ஆட்சிப்பரப்பின் பசுமைப் பரப்பளவை அதிகரிப்பதற்காக, மணப்பட்டு வனம் மற்றும் கடலோரப் பகுதிகளில் 55 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்திக் காடுகள் (Mangrove) மற்றும் 21 ஹெக்டேர் பரப்பளவில்

புதிய காடுகள் உருவாக்கப்படும். மேலும், அம்மா வனம், ஆன்மீக வனம் மற்றும் “தாயின் பெயரில் ஒரு மரம்” உள்ளிட்ட பல்வேறு காடுவளர்ப்புத் திட்டங்களின் கீழ் சாலை ஓரம், ஏரிக்கரை மற்றும் பள்ளிகளில் 4.11 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும். மேலும், கடலோரப் பகுதிகளில் இரண்டு இலட்சம் பனைவிதைகள் நடுவுசெய்யப்படும். மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 76 பள்ளிகளில் நாற்றங்கால்கள் நிறுவப்படும்.

**81.** நாட்டில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து கடல் ஆமைகளை பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் பார்வையிடும் வகையில் நாட்டுப்புற பறவை இனங்கள் இயற்கையான சூழலில் வளர்க்கப்படும். மேலும், பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**82.** 2026-27ஆம் ஆண்டில் வனம் மற்றும் வனவிலங்கு துறைக்காக ₹ 18.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**83.** மக்களின் ஆரோக்கியமே நிலையான வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடித்தளமாகும் என்பதை உணர்ந்து எனது அரசு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளித்து வருகிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான மற்றும் தரமான மருத்துவச் சேவைகளை வழங்குவதில் எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

**84.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் இருதயவியல் சேவைகளை வலுப்படுத்தும் பொருட்டு ECMO மற்றும் சுவாசக்கருவிகள் உட்பட நவீன உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும். சிறுநீரகக் கற்களுக்கு அறுவை சிகிச்சை அல்லாத LASER சிகிச்சை மேற்கொள்வதற்கான கருவிகள் வாங்கப்படும். ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் மூன்று மற்றும் காரைக்கால் பகுதியில் ஒரு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Critical Care Unit) கட்டப்பட்டு வருகின்றன.

**85.** கண் சிகிச்சைக்காக 50 படுக்கைகள் கொண்ட கண் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளதை இந்த மாண்புமிகு பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தற்போது செயல்பட்டு வரும் கண்தான மையம்

முழுமையான கண் வங்கியாக தரம் உயர்த்தப்படும். மேலும், கண் சிகிச்சைக்குத் தேவையான நவீன உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**86.** கரிக்கலாம்பாக்கம், திருநள்ளார் சமுதாய நல மையம், மற்றும் காட்டேரிக்குப்பம் ஆரம்ப சுகாதார மையத்திற்கு இயன்முறை மருத்துவ உபகரணங்கள் வாங்கப்படும். மண்ணாடிப்பட்டு சமுதாய நல மையத்தில் ₹ 25 இலட்சம் மதிப்பிலான 50mA திறனுடைய டிஜிட்டல் கதிரியக்கவியல் நிறுவப்படும். ஏனாம் அரசு பொது மருத்துவமனையில் CT Scanner அமைக்கப்படும்.

**87.** பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AP-PMJAY) திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மற்றும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ஆண்டுக்கு ₹ 5 இலட்சம் வரை இலவச மருத்துவ காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களின் குடும்பங்களுக்கும் மருத்துவக் காப்பீடு விரிவுபடுத்தப்படும்.

**88.** புதுச்சேரி மகாத்மா காந்தி முதுநிலை பல் மருத்துவ கல்லூரியில் தற்பொழுது 7 சிறப்புப் பிரிவுகளில் முதுகலை பல் அறுவை சிகிச்சை பட்டப்படிப்பு உள்ளது. நடப்பு நிதியாண்டு முதல்

பல் மற்றும் முகதாடை சீரமைப்பு மற்றும் பொது சுகாதார பல் மருத்துவ பிரிவுகளில் முதுகலை பல் அறுவை சிகிச்சை படிப்புகளை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பல் மருத்துவ சிறப்பு பிரிவுகளிலும் முதுநிலைப் பல் மருத்துவ படிப்புகளை இக்கல்லூரி வழங்கும்.

**89.** ஏனாமில் 50 படுக்கைகள் கொண்ட AYUSH மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. காரைக்காலில் 30 படுக்கை வசதி கொண்ட AYUSH மருத்துவமனை கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மாகி ராஜீவ் காந்தி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில், பஞ்சகர்மா மற்றும் இயன்முறை மருத்துவப்பிரிவு விரைவில் தொடங்கப்படும். மேலும், புதுச்சேரி இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் யோகா மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**90.** 2026-27ஆம் ஆண்டில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்காக ₹ 1,114.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**91.** சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்து வாழ்க்கையில் வெற்றிபெற உயர்கல்வி கற்பது மிகவும் இன்றியமையதாகும். நமது மாநிலத்தின் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளுடன் குறைந்த செலவில் தரமான உயர்க்கல்வியினை தொடர்ந்து வழங்கிட எனது அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**92.** உயர்கல்வி அனைவருக்கும் எளிதாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலும், மாணவர்களுக்கு போக்குவரத்து செலவால் ஏற்படும் நிதிச்சுமையை குறைக்கவும், எனது அரசு புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**93.** பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவித் திட்டத்தின்மூலம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 2025-26 ஆம் ஆண்டில் மருத்துவம், பொறியியல் மற்றும் செவிலியர் பயிற்சி படிப்புகளில் பயிலும் 4,903 மாணவர்களுக்கு ₹ 26.14 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ₹ 37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**94.** 2026-27ஆம் ஆண்டில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்காக ₹ 346.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு**

**95.** இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களின் நிர்வாகத்தை வெளிப்படையாகவும் திறன்மிக்கதாகவும் மேற்கொள்ளும் வகையில், கைப்பேசி செயலி மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System) உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கோவில் மேலாண்மை அமைப்பு (Integrated Temple Management System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ், 243 கோவில்களின் அடிப்படை விவரங்கள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளது.

**96.** கோவில்களின் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகளுக்காக ₹ 11.50 கோடி மானிய உதவி வழங்க எனது அரசு திட்டமிட்டுள்ளது. இதில், துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு ₹ 10.50 கோடியும், துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோவில்களுக்கு ₹ 1 கோடியும் வழங்கப்படும். மேலும், கோவில்களில் ஒரு கால பூஜை நடத்துவதற்காக ₹ 75 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

**97.** ஏனாம் பகுதியில் கோதாவரி ஆறு வங்காள விரிகுடாவுடன் சங்கமிக்கும் புண்ணிய இடத்தில், 2027-ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதி முதல் ஜூலை 7 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள புனிதமான கோதாவரி புஷ்கரலு விழாவிற்கு (கும்பமேளா), நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் மற்றும் யாத்ரீகர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, ஏனாமில் கோதாவரி ஆற்றின் படித்துறைகளை மேம்படுத்துதல் மற்றும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 2026-27ஆம் ஆண்டில் ₹ 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விழாவிற்கு, மத்திய அரசையும் அனுகி தேவையான நிதி கோரப்பட்டுள்ளது.

**98.** மேலும், புதுச்சேரி வக்ஃபு வாரியம் மூலம் சுமார் 705 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நோக்கில், அவ்வாரியத்திற்கு ₹ 21 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

**99.** 2026-27ஆம் ஆண்டில் இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறைக்காக ₹ 24.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்கள் மற்றும் வணிகம்**

**100.** வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதிலும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் தொழில் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது. முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதிலும், நமது ஆட்சிப்பரப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துவதிலும் எனது அரசு உறுதிபூண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**101.** புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், ஏற்கனவே இயங்கி வரும் தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கும் தொழிற்கொள்கையின் கீழ் பல்வேறு மானியங்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில், தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மற்றும் தொழில்துறை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்கள் உட்பட சுமார் 40 தொழில் நிறுவனங்களுக்கு ₹ 8.50 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

**102.** பிரதம மந்திரி குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் (Pradhan Mantri Formalisation of Micro Food Processing Enterprises)

திட்டத்தின்கீழ், குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை நிறுவுவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், நிதியுதவி வழங்கப்பட்டு வருவதை இந்த மாண்புமிகு பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உணவு பதப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள 562 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் முனைவோர் வளர்ச்சி மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட உணவு பதப்படுத்தலை ஊக்குவிக்கும் வகையில் தொடக்க மூலதன உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

**103.** புதுச்சேரியில் தயாரிப்போம் (Made in Puducherry) என்ற அடையாளத்தை உருவாக்கி, டிஜிட்டல் மற்றும் இணையவழி வணிகம் வாயிலாக நமது உற்பத்தி பொருட்களுக்கு புதிய சந்தைகள் உருவாக்கப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) வளர்ச்சிக்காக, வாங்குவோர் – விற்பனையாளர்கள் சந்திப்புகள், விற்பனையாளர்கள் மேம்பாட்டுத் திட்டங்கள், திறன் மற்றும் டிஜிட்டல் மாற்றத்திற்கான பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி, நிதி மற்றும் சந்தை வாய்ப்புகள் கிடைக்க MSME சேவை மற்றும் வழிகாட்டுதல் மையம் மூலம் முழுமையான வழிகாட்டுதல் வழங்கப்படும்.

**104.** புதிய தொழில்கள், முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு காரைக்காலில் 213 ஏக்கர் பரப்பளவில் பல்துறை சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் புதுச்சேரி-தட்டாஞ்சாவடியில் 21 ஏக்கரில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், புதுச்சேரி அரசு-தனியார் கூட்டாண்மைக் கொள்கை 2026 மூலம் தனியார் முதலீடுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**105.** புதிய முதலீடுகளை ஈர்த்து, தொழில் விரிவாக்கம், புதிய துறைகளின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு எனது அரசு, தற்பொழுது நடைமுறையில் உள்ள தொழில் கொள்கையை மாற்றியமைத்து, இன்றைய தேவைகளுக்கு ஏற்ற புதிய தொழில் கொள்கையை உருவாக்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**106.** மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் (Raising and Accelerating MSME Performance) திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 865 பயனாளிகளுக்கு

₹ 10.62 கோடி நிதியுதவி வழங்கி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் போட்டித்திறன், உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**107.** 2026-27ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிகத் துறைக்காக ₹ 122.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**108.** அரசின் செயல்பாடுகள், மேலும் திறமையானதாகவும், வெளிப்படையானதாகவும் மற்றும் மக்களை மையப்படுத்தப் பட்டதாகவும் மாற்றுவதில் தகவல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. அனைத்து துறைகளிலும் மின்னணு ஆளுமை திட்டங்களை விரிவுபடுத்தி, டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் அரசுச் சேவைகள் மக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் சென்றடைய எனது அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**109.** அரசுத் துறைகளில் தேசிய தகவல் மையத்தின் மின்னணு அலுவலக முறை (e-Office) படிப்படியாக செயல்படுத்தப்பட்டு, பாரம்பரிய நடைமுறைகளை முழுமையான

மின்னணு மற்றும் காகிதமில்லா நிர்வாக முறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், அரசு உதவி பெறும் பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

**110.** அரசு ஊழியர்களின் மனிதவள மேலாண்மையை நவீனபடுத்தவும் நிர்வாக செயல்திறனை மேம்படுத்தவும் மின்னணு மனிதவள மேலாண்மை அமைப்பு (e-HRMS) படிப்படியாக அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வமைப்பு அரசு ஊழியர்களின் முழுமையான சேவைப் பதிவுகளை ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தில் பராமரித்து வெளிப்படையான மனிதவள நிர்வாகத்தை உறுதி செய்கிறது. முதற்கட்டமாக, சுமார் 18,000 அரசு ஊழியர்களுக்கான பதிவுகள் உருவாக்கப்பட்டதுடன், அரசின் மின்னஞ்சல் முகவரிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**111.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், இந்திய கணினி அவசரநிலைப் பதிலளிப்பு அமைப்பின் (CERT-In) வழிகாட்டுதல்களின்படி தகவல் தொழில்நுட்ப இயக்குநரகத்தில் பிரத்யேக இணையப் பாதுகாப்புப் பிரிவு (Cyber Security Division) நிறுவப்படும். இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை

மேம்படுத்தும் நோக்கில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்களில் (IT & ITES) 150 மாணவர்களுக்கு மாதம் ₹ 10,000 உதவித்தொகையுடன் 12 மாத காலத்திற்கு “டிஜிட்டல் பயிற்சி பணிவாய்ப்பு” (Digital Internship Programme) வழங்கப்படும்.

**112.** 2026-27ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பத் துறைக்காக ₹ 15.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலம்**

**113.** தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நலனை மேம்படுத்துவதிலும் எனது அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. தொழிலாளர் சட்டங்களை திறம்பட செயல்படுத்தி, நியாயமான ஊதியம், பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதுடன் அமைப்பு மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாத்து வருகிறது.

**114.** தொழில் செய்வதை எளிதாக்குவதற்கும், வெளிப்படையான நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கும், பதிவு, உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர் துறை சேவைகள் இணையவழியில் வழங்கப்படும்.

மேலும், தொழிலாளர் துறையால் வழங்கப்படும் உரிமங்கள் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள், பாதுகாப்பான மற்றும் காகிதமற்ற சேவைகளை வழங்கும் வகையில் டிஜிலாக்கர் (DigiLocker) தளத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

**115.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு முழுவதும் தொழில்துறை சார்ந்த திறன் தேவைகளை கண்டறிந்து, உருவாகி வரும் வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வடிவமைக்கும் நோக்கில் திறன் இடைவெளி ஆய்வு (Skill Gap Survey) மேற்கொள்ள எனது அரசு திட்டமிட்டுள்ளது. வேலைவாய்ப்பை அதிகரிக்க வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும். காரைக்கால் பிராந்தியத்தில், கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் நூலகம் ஒன்றை கல்வி மையமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**116.** புதுச்சேரியில், தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்கள் ஒன்றுக்கூடி வேலை தேடுபவர்களையும், வேலை அளிப்பவர்களையும் டிஜிட்டல் முறையில் இணைப்பதற்கு ஒரு பொதுவான மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**117.** 2026-27ஆம் ஆண்டில் தொழிலாளர் துறைக்காக ₹ 48.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி**

**118.** நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் உள்ளாட்சி நிர்வாகம் முக்கிய பங்களிக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தி தரமான அடிப்படை வசதிகள் அனைவருக்கும் எளிய முறையில் வழங்க எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

**119.** உள்ளாட்சி நிர்வாகத்தை பொதுமக்கள் பங்களிப்புடன் வலுப்படுத்தும் நோக்கில் "முதலமைச்சர் உள்ளாட்சி வளர்ச்சிப் பாதைத் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தை அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதமாக சாலைகள், மழைநீர் வடிகால்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், பொதுக் கழிப்பிடங்கள், மயானங்கள், சந்தைகள், நீர்நிலைகள், தெருவிளக்குகள் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பரிந்துரையின் அடிப்படையில் ₹ 1,131 கோடி மதிப்பீட்டில் 2,282 பணிகளை உள்ளடக்கிய விரிவான ஐந்தாண்டுத் திட்டம் முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உள்கட்டமைப்பு பணிகள் படிப்படியாக தொகுதிவாரியாக செயல்படுத்தப்படும்.

**120.** திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குரும்பாபேட்டில் உள்ள வளம்மீட்பு பூங்கா ₹ 18.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும். மேலும், அனைத்து கிராமங்களிலும் ஆழ்துளை குழாய் மூலமாக குடிநீர் வழங்கும் நிலையை கணக்கீடு செய்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக தரமான குடிநீர் வழங்கப்படும்.

**121.** பிரதம மந்திரி ஸ்வநிதி (PM SVANidhi) திட்டத்தின் கீழ், மத்திய அரசின் நிதியுதவியுடன் தனிச்சிறப்பு மிக்க தெருவோர உணவு மையம் (Iconic Street Food Hub) அமைக்கப்பட உள்ளதை நான் இந்த மாண்புமிகு பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், சுகாதாரமான மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட உணவு விற்பனை வசதிகள், நமது மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

**122.** மத்திய அரசின் புதுப்பிக்கப்பட்ட ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ் அபியான் (Revamped Rashtriya Gram Swaraj Abhiyan) திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு மின்னணு ஆளுமை மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் திறன் மேலும் வலுப்படுத்தப்படும்.

**123.** 2026-27ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறைக்காக ₹ 388.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**காவல்**

**124.** சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்தி, பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளித்து அமைதியான சூழலை உறுதி செய்வதில் எனது அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. காவல் துறையை நவீன மயமாக்கும் நோக்கில் உள்கட்டமைப்பு மேம்பாடு, நவீன உபகரணங்கள் கொள்முதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**125.** புதுச்சேரி காவல்துறையின் சிறப்பான சேவையைப் பாராட்டி, பெருமைக்குரிய குடியரசுத் தலைவரின் காவல் கொடி (President’s Police Colour) நமது புதுச்சேரி காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாண்புமிகு பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுச்சேரியில் சட்டம்-ஒழுங்கை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் 2வது இந்திய ரிசர்வ் பட்டாலியன் (IRBn) அமைக்க மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்காக, மத்திய அரசு ₹ 80 கோடி நிதியுதவி வழங்கவுள்ளது. மேலும், 1,007 பணியிடங்கள் இதற்காக ஏற்படுத்தப்பட்டு,

விரைவில் நிரப்பப்படும். அதேபோல், 70 காவல் துணை ஆய்வாளர் பணியிடங்களும், 148 காவலர் பணியிடங்களும் வெற்றிகரமாக நிரப்பப்பட்டுள்ளன.

**126.** காவல் நிலையத்தின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் பொருட்டு, ₹ 28 கோடி மதிப்பீட்டில் நவீன வாகனங்கள், இணையவழி பாதுகாப்பு கருவிகள் (Cyber Security Tools), தகவல் தொடர்பு சாதனங்கள், கணினிகள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், சிறைக் கைதிக்களுக்கான வாகனங்கள் (Prison Vans) மற்றும் இரவுப் பார்வை தொலைநோக்கிகள் (Night Vision Binoculars) ஆகியவை நடப்பு நிதியாண்டில் கொள்முதல் செய்யப்படும்.

**127.** புதுச்சேரி பகுதியில் பெரிய கடை காவல் நிலையம், கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலைய கட்டிடம் கட்டப்படும். மேலும், காவல் துறை தலைமையகம், ஆயுதக்கிடங்கு கட்டிடம் புதுப்பிக்கப்படும். காரைக்கால் பகுதியில் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புகள், மாகி பகுதியில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், கடலோர காவல் நிலையம் ஆகியவை கட்டப்படுவதுடன், பல்வேறு பராமரிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**128.** 2026-27 ஆம் ஆண்டில் காவல் துறைக்காக ₹ 468.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**129.** புதுச்சேரி பழைய துறைமுகத்தில் பயணியர் முனையம் (Cruise Terminal) அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். துறைமுகத்தில் ஏற்கனவே உள்ள கிடங்கு ஒன்றை சீரமைத்து அதில் கப்பல் பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் தொடங்கப்படும். மாநில அளவிலான கடல்வழி நீர்வழிகள் குறித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி துறைமுகத்திற்கு சொந்தமான மண்வாரிக் கப்பலை பராமரிப்பு பணிகள் செய்து துறைமுக கால்வாய்ப் பகுதிகளை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படும்.

**130.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் துறைமுகம் சார்ந்த தொழில் வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின், துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப்போக்குவரத்து அமைச்சகத்தின் “சாகர்மாலா 2.0” திட்டத்தின்கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் துறைமுகம் சார்ந்த பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் துறைமுகங்களிலிருந்து பொருட்கள் மற்றும் சரக்குகள் செல்ல வேண்டிய இடத்திற்கு எளிதாக சென்றடையும் வகையில் போக்குவரத்து இணைப்புகள் மேம்படுத்தப்படும்.

**131.** 2026-27ஆம் ஆண்டில் துறைமுகத் துறைக்காக ₹ 11.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறைத் துறை

**132.** சிறைக் கைதிகளுக்கான மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், மனநல மற்றும் உளவியல் ஆலோசனை சேவைகளும் வலுப்படுத்தப்படும். அவர்கள் விடுதலைக்குப் பிறகு சமூகத்தில் மறுவாழ்வினை எளிதாக்கும் வகையில் தொழிற்பயிற்சி, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், கல்வி மற்றும் எழுத்தறிவு திட்டங்கள், நடத்தை ஆலோசனை மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட உள்ளன.

**133.** சிறை நிர்வாகத்தை நவீனப்படுத்தும் வகையில், முழு உடல் ஸ்கேனர்கள் (Full Body Scanners) மற்றும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட மேம்பட்ட பாதுகாப்பு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்காக, ₹ 4.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காரைக்கால் மாவட்டத்தில் சுமார் ₹ 80 கோடி மதிப்பீட்டில் நவீன பாதுகாப்பு மற்றும் சீர்திருத்த வசதிகளுடன் கூடிய நவீன மாவட்டச் சிறைச்சாலை அமைக்கப்பட உள்ளது.

**134.** 2026-27ஆம் ஆண்டில் சிறைத் துறைக்காக ₹ 19.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப்பணிகள்**

**135.** மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும் பொதுப்பணித்துறை முக்கிய பங்காற்றி வருகிறது. நவீன கட்டுமான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரமான உள்கட்டமைப்பை உருவாக்க எனது அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**136.** ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Development Bank) நிதியுதவியுடன், புதுச்சேரி நகர்ப்புறப் பகுதிகளில் 100 விழுக்காடு பாதாள கழிவுநீர் வடிகால் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளதை மாண்புமிகு பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நகர்ப்புறத்தில் சுமார் 60 விழுக்காடு பகுதிகள் பாதாள கழிவுநீர் வடிகால் வலையமைப்பின் கீழ் உள்ளன. இவற்றின் உள்கட்டமைப்புகள் புனரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்படும். மேலும், பாதாள கழிவுநீர் வடிகால் இல்லாத ஏனையப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**137.** பிரெஞ்சு வளர்ச்சி முகமையின் (Agence Francaise Developpment) நிதியுதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் குடிநீர் வழங்கல் அமைப்பை நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**138.** புதுச்சேரியில் குடிநீர் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், பிருந்தாவனம் மற்றும் சித்தானந்தசாமி நகர் பகுதிகளில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், முத்தியால்பேட்டை பகுதியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் குழாய்களைப் புனரமைத்தல், காலாப்பட்டு சுனாமி மறுவாழ்வுக் குடியிருப்பில் குடிநீர் விநியோகத்தை மீட்டமைத்தல், பிள்ளையார்க்குப்பம் மற்றும் சின்ன காலாப்பட்டு பகுதிகளில் ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டங்களை செயல்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் ₹ 97.19 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் 1,000-க்கும் அதிகமான TDS அளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள இடங்களில், 50 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**139.** இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் கடலரிப்பைத் தடுக்கும் வகையில், பிள்ளையார்க்குப்பம் முதல் கணபதிசெட்டிக்குளம் வரையிலான கடற்கரைப் பகுதியில் கடலோரப் பாதுகாப்புக் கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் வில்லியனூர் பகுதியில் பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் ₹ 49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பாகூர் ஏரியின்

உபரிநீர் கால்வாயை ஒட்டிய கரையில் தார் சாலை மற்றும் ஒருவழிச் சாலை அமைக்கும் பணிகள் ₹ 10.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, நிறைவடையும் நிலையில் உள்ளன.

**140.** மேலும், பெண்ணையாறு, சங்கராபரணி மற்றும் இதர ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த ஏரிகளைப் பழுதுபார்த்து, புனரமைத்து, சீரமைப்பதற்காக ₹ 497 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முன்மொழிவு, 90 விழுக்காடு மானியம் பெறுவதற்காக, மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் RRR திட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**141.** மேலும், காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் பாதாள கழிவுநீர் வடிகால் திட்டத்தை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் (Detailed Project Reports) தயாரிக்கப்பட்டு பணிகள் நடப்பு நிதியாண்டிலேயே தொடங்கப்பட உள்ளன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் நவீன மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட பாதாள கழிவுநீர் வடிகால்கள் வசதி கிடைக்கும். இதன்மூலம் கழிவுநீர் அறிவியல் முறையில்

சேகரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுவதால், பொது சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

**142.** பாகூரில் ₹ 9.10 கோடி செலவில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்படும். கதிர்காமத்தில் உள்ள இந்திரா காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ₹ 16.91 கோடி செலவில் நிர்வாகக் கட்டிடமும், காரைக்கால், அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் ₹ 10 கோடி செலவில் கட்டப்படும். காரைக்கால் பிராந்தியத்தின் கோட்டுச்சேரியில், ₹ 10 கோடி செலவில் அதிநவீன கால்நடை மருத்துவமனை மற்றும் அக்கரைவட்டம் பகுதியில் புதியதாக கட்டப்படவுள்ள சிறைச்சாலைக்கு பாதுகாப்பு தடுப்புச் சுவர் அமைக்கப்படும்.

**143.** மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், புதுச்சேரியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ₹ 60.19 கோடி மதிப்பீட்டில் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சட்ட உதவி சேவைகளுக்கான கட்டடம் கட்டப்படும். மேலும், காரைக்கால் நீதிமன்ற வளாகத்தில் ₹ 6.27 கோடி மதிப்பீட்டில் வழக்குரைஞர்கள் தங்கும் அறை, குடும்ப நல விசாரணை மையம் உட்பட கூடுதல் அறைகள் கட்டப்படும்.

**144.** புதுச்சேரி பிராந்தியத்தில் உப்பளம், காமராஜ் நகர், உழவர்கரை மற்றும் நெல்லித்தோப்பு தொகுதிகளில் ₹ 92.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோக அமைப்பைச் சீரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். காரைக்கால் பகுதி வளத்தாமங்கலம் கிராமத்தில் 1.50 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 1 இலட்சம் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி உட்பட குடிநீர் வழங்கல் மேம்பாட்டு பணிகள் ₹ 6.34 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். மேலும், நெடுங்காட்டிலிருந்து மேலக்காசாக்குடி வரை மற்றும் M.S.P லட்சுமி நகரிலிருந்து நேரு நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை ₹ 6.42 கோடி செலவில் பம்பிங் குழாய்கள் அமைக்கப்படும்.

**145.** புதுச்சேரி பகுதியில் ₹ 21.86 கோடி செலவில் L மற்றும் U வடிவ வடிகால்கள் அமைக்கும் பணிகளும், கிராமப்புற சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். மேலும், கருவடிக்குப்பம்-எடையன்சாவடி சாலையோரத்தில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக ₹ 16.17 கோடி செலவில் கேபியன் கட்டமைப்புகளை பயன்படுத்தி பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படும். மத்திய சாலை மேம்பாட்டு நிதியின்கீழ் ₹ 11.71 கோடி செலவில் மூலக்குளம் சந்திப்பு மற்றும் கோரிமேடு சந்திப்பை இணைக்கும் சாலை மேம்படுத்தப்படும்.

**146.** காரைக்கால் மாவட்டத்தில் NH-32 (பழைய NH-45 A) பகுதிகளில் ₹ 56.31 கோடி மதிப்பீட்டில் ஒருமுறை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கடற்கரைச் சாலை ₹ 26.87 கோடி செலவில் அழகுபடுத்தப்படும். மாகி பூழித்தலா கடற்கரையில், மீன்பிடி துறைமுகம் முதல் மாநில எல்லை வரை கடற்கரை தடுப்புச் சுவரை ஒட்டி நடைபாதை அமைத்து கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் ₹ 1.30 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், மாகியில் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி ₹ 7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**147.** காரைக்கால், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மணம்பேடு தடுப்பணையின் கட்டுப்பாட்டு அமைப்பை ₹ 12 கோடி செலவில் மறுகட்டமைக்கப்படும். மேலும், பறவைப்பேட்டையில் 2 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். மத்திய அரசின் ஜல் சக்தி திட்டத்தின்கீழ் ஏனாம் கோதாவரி ஆற்றங்கரை மற்றும் தீவு எண் 3 ஆகியவை மேம்படுத்தப்பட்டு வெள்ளத்தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**148.** 2026-27ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறைக்காக ₹ 850.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக மேம்பாடு**

**149.** ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்வதில் எனது அரசு கவனம் செலுத்தி வருகிறது.

**150.** கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதில் அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதற்காக, மத்திய அரசின் விக்சித் பாரத் – வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதிமொழி இயக்கம் (கிராமப்புறம்) (VB-G RAM G), ஜுலை 1–ஆம் தேதி முதல் இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் தகுதியுடைய ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் ஆண்டுதோறும் 125 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் மொத்தம் 1,124 பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் 20 இலட்சம் மனித–வேலைநாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**151.** தூய்மை இந்தியா (கிராமின்) திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதன் மூலம் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு எனது அரசு உயர்ந்த முன்னுரிமை அளித்து வருகிறது. 108 கிராமப் பஞ்சாயத்துகளிலும் 100 விழுக்காடு திறந்தவெளி மலம் கழிப்பு இல்லாத (Open Defecation Free Plus) நிலையை அடையும் நோக்கில், தனிநபர் இல்லக் கழிப்பறைகள், சமூக சுகாதார வளாகங்கள், திடக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (Faecal Sludge Treatment Plants) மற்றும் பரவலாக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் (Decentralized Wastewater Treatment Systems) உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**152.** மேலும், பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் (PMGSY) திட்டத்தின்கீழ், ₹ 67.02 கோடி மதிப்பீட்டில் நவீன கட்டுமான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி 108 கிலோமீட்டர் நீளமுள்ள கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளன. இதன்மூலம் அனைத்து பருவ காலங்களிலும் தடையற்ற போக்குவரத்து வசதி உறுதி செய்யப்படுவதுடன், சாலைகளின் நீடித்த பயன்பாடும் மேம்படுத்தப்படும். மேலும், கல்வி நிறுவனங்கள், சுகாதார மையங்கள், சந்தைகள் மற்றும் வளர்ச்சி மையங்களை கிராமப்புற மக்கள் எளிதில் சென்றடைய வழிவகை ஏற்பட்டு, கிராமப்புற மக்களுக்கு அதிக பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இது பெரிதும் துணைபுரியும்.

**153.** 2026-27ஆம் ஆண்டில் ஊரக மேம்பாட்டுத் துறைக்காக ₹ 158.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

**154.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்வதை உறுதி செய்யவும், பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அனைவருக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் எனது அரசு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**155.** உலகத் தரத்திலான கல்வி உள்கட்டமைப்பு மற்றும் கற்றல் வசதிகளுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் தலா ஒன்று என மொத்தம் நான்கு முதலமைச்சரின் முன்மாதிரிப் பள்ளிகள் நிறுவப்பட உள்ளதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பள்ளிகளில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் (SMART Classrooms), மேம்பட்ட அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள், திறன் அடிப்படையிலான கல்வி, விளையாட்டு வசதிகள், டிஜிட்டல் கற்றல் வளங்கள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான தரமான பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம் அரசு பள்ளிக் கல்வியில் முழுமையான மற்றும் உயர்தர கல்விக்கான முன்மாதிரியாக இத்திட்டம் அமையும்.

**156.** வாசிப்பு, ஆய்வு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் பண்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, பொதுத்தேர்வு முடிவுகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் சிறந்த அரசு பள்ளிகளில் அதிநவீன நூலக வசதிகளை ஏற்படுத்த எனது அரசு உத்தேசித்துள்ளது. அரசு பள்ளிகளின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கற்றல் தளங்கள், மெய்நிகர் ஆய்வகங்கள், மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்ட கற்றல் முறைகள் கொண்ட “விரிவான கல்வித் தொழில்நுட்ப திட்டம்”(EduTech) அறிமுகப்படுத்தப்படும்.

**157.** வயது வந்தோருக்கான எழுத்தறிவு மற்றும் ஆயுள் முழுவதும் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் புதிய இந்திய எழுத்தறிவு திட்டம் (New India Literacy Programme – ULLAS) தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாட்சிப்பரப்பில் 100 விழுக்காடு எழுத்தறிவை அடையும் பொருட்டு, எழுத்தறிவற்ற நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு தேவையான கல்வி ஆதரவு வழங்கப்படும்.

**158.** மாணவியரின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சானிட்டரி நாப்கின்

எரிப்பான் (Incinerator) நிறுவப்படும். இதன்மூலம் பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்களை பாதுகாப்பாகவும் மற்றும் சுகாதாரமான முறையில் அகற்றுவதற்கு வழிவகுக்கும்.

**159.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள், பாடப்புத்தகங்கள், பயிற்சி நோட்டுப் புத்தகங்கள், காலணிகள், புத்தகப் பைகள் மற்றும் மடிக்கணினிகள் தொடர்ந்து வழங்கப்படும். மாணவர்களுக்கு ஊட்டச்சத்து ஆதரவை உறுதி செய்யும் வகையில் அனைத்து வேலை நாட்களிலும் மதிய உணவுடன் சேர்த்து வேகவைத்த முட்டை வழங்கும் திட்டம், காலை சிற்றுண்டித் திட்டம் மற்றும் மாலை நேர சிறுதானிய சிற்றுண்டித் திட்டம் ஆகியவை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**160.** PM SHRI திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் ஒரு பகுதியாக நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் (SMART Classrooms), அதிவேக இணைய வசதி, பாடங்களை மாணவர்களுக்கு எளிமையாகவும், புரியும் வகையில் கற்பிக்க பயன்படும் நவீன மின்னணு சாதனங்கள் வழங்கப்படும். இம்முயற்சி, மாணவர்களுக்கு 21ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான

திறன்களை வழங்கி, கற்றல் தரத்தை உயர்த்துவதோடு, தேசிய கல்விக் கொள்கையின் நோக்கங்களுக்கு ஏற்ப தொழில்நுட்பம் சார்ந்த கல்விச் சூழலை உருவாக்கும்.

**161.** ஆசிரியர்களின் பணியிட மாறுதல்களில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் வித்யா சமீக்ஷா கேந்திரா மற்றும் மின்னணு மனிதவள மேலாண்மை அமைப்பு ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு பணியிட மாறுதல்கள் ஒருங்கிணைந்த கலந்தாய்வு மூலம் நடைபெறும்.

**162.** 2026-27ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்காக ₹ 1,102.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**163.** காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவை நமது சமூகத்தின் எதிர்காலத்தை பாதிக்கும் முக்கிய சவால்களாக உருவெடுத்துள்ளன. அறிவியல் அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் நிலையான முயற்சிகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கேற்ப வளர்ச்சியையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மேம்படுத்த எனது அரசு உறுதிபூண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**164.** புதுச்சேரியில் உலக வங்கியின் நிதியுதவியுடன் PY-SHORE என்ற திட்டத்தை, ₹ 1,433 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி அரசு தொடங்கவுள்ளது என்பதை இந்த மாண்புமிகு பேரவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறிப்பாக மீன்வளம் மற்றும் சுற்றுலா துறைகளில் இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவதையும், பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களின் கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பையும் மேம்படுத்தும். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**165.** காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கில், புதுச்சேரி காலநிலை மாற்றப்பிரிவை, நிரந்தர நிறுவனமாக வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், கார்பன் வெளியேற்றத்தை குறைத்து வளர்ச்சியை ஏற்படுத்தும் திட்டங்கள், மின்னணு கழிவு கணக்கெடுப்பு மற்றும் அறிவியல் அடிப்படையிலான கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் சுற்றுச்சூழல் மாசு குறைக்கப்படும்.

**166.** 2026-27ஆம் ஆண்டில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்காக ₹ 16.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலம்**

**167.** சமூகத்தில் நலிவுற்ற மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஓய்வூதியம், இலவச அரிசி உட்பட பல்வேறு நலத்திட்டங்களை எனது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**168.** மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களை எளிதாகப் பெரும் வகையில் ஒருங்கிணைந்த இணையவழி நலத்திட்ட சேவைத் தளம் உருவாக்கப்படும். பொது சேவைகளில் சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் சேவை வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு அரசுத் துறைகளின் முன்களப் பணியாளர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

**169.** அரசுப் பள்ளிகளில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான ஆதரவு வழங்கப்படும். இதற்காக ஆசிரியர்களுக்கு மதியிறுக்கம், மனவளர்ச்சிக் குறைபாடு, கற்றல் குறைபாடு குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**170.** மேம்பட்ட குழந்தை வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில் எனது அரசு, குழந்தைகளின் வளர்ச்சிக் குறைபாடுகள் மற்றும் மாற்றுத் திறன்களை ஆரம்ப நிலையிலேயே

கண்டறியும் வகையில் கிராமங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் வளர்ச்சி மதிப்பீட்டு முகாம்கள், பெற்றோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் டிஜிட்டல் கற்றல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**171.** பயணம் செய்ய இயலாத முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு, அவர்கள் இருப்பிடத்திலேயே மருத்துவ சேவைகள் வழங்கும் வகையில் "நடமாடும் மருத்துவ சேவை" (Mobile Health Unit) அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் நோய்த்தடுப்பு, இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை, இதய கண்காணிப்பு உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ சேவைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**172.** நீண்டகால மற்றும் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கருணைமிக்க பராமரிப்பு வழங்கும் நோக்கில், தன்னார்வளர்களை அடிப்படையாகக் கொண்டு நோய் தணிப்பு பேணல் திட்டம் (Palliative Care Programme) அறிமுகம் செய்யப்படும்.

**173.** மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், முதியோர்கள் மற்றும் சமூகத்தின் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்காக சிறப்பாக பணியாற்றும் தனிநபர்கள், தன்னார்வளர்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் புதுச்சேரி மாநில சமூக சேவை விருதுகள் வழங்கப்படும்.

**174.** 2026-27ஆம் ஆண்டில் சமூகநலத் துறைக்காக ₹132.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

**175.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் விளையாட்டை மேம்படுத்தி, இளைஞர்களின் திறனை முழுமையாக வெளிக்கொண்டுவரும் நோக்கில் எனது அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நவீன விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தகுதியான வீரர், வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்கத்தொகையினை எனது அரசு வழங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**176.** “மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு நிதி” (SASCI) திட்டத்தின்கீழ் புதுச்சேரி, இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில் ₹8.85 கோடி மதிப்பீட்டில் செயற்கை புல்தரை ஹாக்கி மைதானம் அமைக்கப்படும். காட்டேரிக்குப்பம்,

முருங்கப்பாக்கம் மற்றும் காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் தலா ₹ 3.50 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படும். மாகி, பந்தக்கல் I.K. குமரன் அரசு மேல்நிலைப்பள்ளியில் செயற்கை புல்தரை கால்பந்து மைதானம் அமைக்கப்படும்.

**177.** புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் ஐந்து செயற்கை டென்னிஸ் மைதானங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச, தேசிய மற்றும் தெற்கு மண்டல அளவிலான போட்டிகளில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்களுக்கு ₹ 1.40 கோடி மதிப்பிலான ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

**178.** புதுச்சேரி, உப்பளத்தில் உள்ள விளையாட்டுப் பள்ளியில் 'கேலோ இந்தியா மாநில சிறந்த திறன் மையம்' (Khelo India State Centre of Excellence) நிறுவப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் முறையே கால்பந்து, பேட்மின்டன், வாலிபால் மற்றும் தடகள விளையாட்டுகளுக்கான 'கேலோ இந்தியா மையங்கள்' (Khelo India Centre) நிறுவப்பட்டுள்ளன.

**179.** இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஆதரவுடன், 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 3-வது

கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை நடத்த புதுச்சேரி ஆட்சிப்பரப்பு திட்டமிட்டுள்ளது. இம்மதிப்புமிக்க தேசிய விளையாட்டுப் போட்டியில் 25 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 700 விளையாட்டு வீரர்கள் பங்கேற்று, புதுச்சேரியின் அழகிய கடற்கரைகளில் பல்வேறு கடற்கரை விளையாட்டுப் போட்டிகளில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் விளையாட்டு, சுற்றுலா மற்றும் இளைஞர்களின் பங்களிப்பு மேலும் ஊக்குவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**180.** மேலும், உள்துறை அமைச்சகம், இளைஞர் நலன் அமைச்சகம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்துடன் இணைந்து, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தேசிய அளவிலான கடற்கரை கைப்பந்து (Beach Volleyball) போட்டியையும் நடத்த எனது அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்வுகள், தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான சிறந்த இடமாக புதுச்சேரியை முன்னிறுத்துவதுடன், இவ்வாட்சிப்பரப்பைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளையும், அனுபவத்தையும் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**181.** நடைப்பயிற்சி என்பது அனைத்து வயதினரும் எளிதில் மேற்கொள்ளக்கூடிய பயனுள்ள உடற்பயிற்சியாகும், தற்போதைய சூழலில் வாழ்க்கைமுறை சார்ந்த நோய்களின் பரவல் அதிகரித்து வருவதால், தினசரி நடைப்பயிற்சியின் அவசியம் குறித்து விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் பொதுமக்களின் உடல் மற்றும் மனநலன் மேம்படுத்தப்பட்டு ஆரோக்கியமான புதுச்சேரியை உருவாக்க முடியும்.

**182.** 2026-27ஆம் ஆண்டில் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறைக்காக ₹ 46.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நில அளவை மற்றும் பதிவேடுகள்**

**183.** இந்திய நில அளவைத் துறையுடன் இணைந்து, ட்ரோன் ஆய்வு மூலம் இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் பெரிய அளவிலான நில அளவை (Large Scale Mapping) மேற்கொள்ளப்பட்டு வருவதை இந்த மாண்புமிகு பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நவீன மறுஅளவீட்டு திட்டத்தின் மூலம் உயர்தர வரைபடங்கள் தயாரிக்கப்படுவதுடன், வளர்ச்சித் திட்டமிடல் மற்றும் நில மேலாண்மைக்கான வலுவான அடித்தளம் உருவாக்கப்படும்.

**184.** “தேசிய புவிசார் அறிவு அடிப்படையிலான நகர்ப்புற குடியிருப்புகளின் நில ஆய்வு” (NAKSHA) திட்டத்தின்கீழ், புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நகர்ப்புற நிலப் பதிவேடுகளை நவீனமயமாக்கும் திட்டம் புதுச்சேரியில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கு சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ், NAKSHA திட்டத்தின் முதல் கட்ட இலக்கை (Milestone-I) வெற்றிகரமாக நிறைவேற்றியதற்காக புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு ₹ 5 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**185.** நில அளவை உள்கட்டமைப்புகளை வலுப்படுத்தும் வகையில், புதுச்சேரியில் தொடர்ந்து செயல்படும் குறிப்பு நிலையங்கள் (Continuously Operating Reference Stations) நெட்வொர்க் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்ற வசதிகளை காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளிலும் அமைக்க எனது அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், நிலப் பதிவேடுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் வகையில் பயனாளரின் முன் ஒப்புதலோடு ஆதார் எண்ணை வருவாய் பதிவேடுகளுடன் இணைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**186.** பொதுமக்களுக்கு சேவைகளை விரைவாக வழங்கவும், நில அளவை தொடர்பான வழக்குகளை விரைந்து தீர்வு காணவும், உரிமம் பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் வரைவாளர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

**187.** 2026-27ஆம் ஆண்டில் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறைக்காக ₹ 17.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**188.** புதுச்சேரியை புகழ்மிக்க சுற்றுலா மையமாக உருவாக்கும் நோக்கில் எனது அரசு பல்வேறு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பாரம்பரிய, கலாச்சார, ஆன்மிக, கடலோர மற்றும் இயற்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதுடன் சுற்றுலா உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான அடிப்படை வசதிகளையும் எனது அரசு மேம்படுத்தி வருகிறது. இதன் காரணமாக உள்நாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

**189.** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்தியாவின் 50 முக்கியமான சுற்றுலா தளங்களை உயர்தரமான சுற்றுலா தளமாக மேம்படுத்தும் வகையில் "ஒரு மாநிலம் ஒரு உலகலாவிய சுற்றுலா தளம்" என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொறு சுற்றுலா தளத்திற்கும் ₹ 500 கோடி

ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், புதுச்சேரியின் பாரம்பரிய நகரப் பகுதிகள், கடற்கரைகள், கலாச்சாரம், ஆன்மீகம் மற்றும் பிற முக்கிய சுற்றுலா தளங்கள் உயர்தரமான சுற்றுலா தளங்களாக மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் நிலையான சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்தப்படுவதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவமும் மேம்பட்டு, நமது ஆட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும்.

**190.** சுற்றுலாப் பயணிகளின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், முக்கிய சுற்றுலா நிகழ்வுகளை ஊக்குவிப்பதற்கும், கடற்கரைச் சாலையில் உள்ள சீகல்ஸ் உணவகம் புதுப்பிக்கப்பட உள்ளதை இந்த மாண்புமிகு பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**191.** பழைய துறைமுக வளாகத்தில் உள்ள மாநாட்டு அரங்கம் மற்றும் நகர பொழுதுபோக்கு மையம் ஆகியவை கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், மாநாடுகள் மற்றும் திருமண நிகழ்வுகளுக்கான முதன்மை மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பெரிய அளவிலான நிகழ்ச்சிகள் நடைபெறத்தக்க வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நவீன சமையலறை வசதிகள், கழிப்பறை வளாகம் மற்றும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

**192.** சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் வகையில் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற “லே கஃபே” உணவகத்தின் பாரம்பரியத் தன்மையை பாதுகாத்து, முழுமையாக புதுப்பிக்கப்படும். மேலும், கென்னடி நகரில் உள்ள “யாத்ரி நிவாஸ்”, சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கான தங்கும் வசதிகளை மேம்படுத்தும் வகையில் மறுசீரமைக்கப்படும்.

**193.** நீர் விளையாட்டு நடவடிக்கைகளில் முக்கிய மையங்களாக விளங்கும் புதுச்சேரி சுண்ணாம்பாறு படகுத் துறை மற்றும் பாரடைஸ் கடற்கரை பகுதிகள், ஃபெங்கல் புயலால் சேதமடைந்து அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உருவாகியுள்ளது. இப்பகுதிகளை நவீன நீர் விளையாட்டு மற்றும் சாகச விளையாட்டு வசதிகள், உபகரணங்களுடன் மறுசீரமைக்க எனது அரசு உத்தேசித்துள்ளது.

**194.** சுற்றுலாப் பயணிகளுக்கு, கைவினைப் பொருட்களின் மீதான ஈடுபாட்டை ஊக்குவித்து வாங்கும் தன்மையை அதிகரிக்கவும், கலை தொடர்பான கூடுதல் அனுபவத்தை வழங்கவும், முருங்கப்பாக்கம் கலை மற்றும் கைவினைக் கிராமத்தில் கூடுதலாக கைவினை கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்க கூடுதல் கட்டிடம் கட்டப்படும். மேலும், புதுச்சேரியை முன்னணி

சுற்றுலாத் தலமாக உலகளவில் அறிமுகப்படுத்தும் நோக்கில் பல்வேறு சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், பன்முக ஊடக விளம்பரங்கள் மற்றும் டிஜிட்டல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும்.

**195.** சர்வதேச யோகா திருவிழா, உலக சுற்றுலா தினம், கடற்கரை திருவிழா மற்றும் சுற்றுலா மாநாடு போன்ற முக்கிய நிகழ்சிகள் தொடர்ந்து நடத்தப்படும். சாகச சுற்றுலா மற்றும் நீர் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் 62 சுற்றுலா படகு இயக்குபவர்களுக்கு (Operators) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கான பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் உறுதி செய்யும் நோக்கில் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதல் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கடற்கரைப் பகுதிகளில் 39 உயிர்காக்கும் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**196.** புதுச்சேரி விமான நிலைய விரிவாக்கம் எனது அரசின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். இதற்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணிக்காக தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய விமான நிலைய ஆணையத்துடன் இணைந்து, தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**197.** 2026-27ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறைக்காக ₹ 55.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர மற்றும் கிராம திட்டமிடல்**

**198.** பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பான மற்றும் குறைந்த விலையில் வீட்டு வசதிகள் மிகவும் அவசியமானவை. நகர்ப்புற மற்றும் குடிசைப் பகுதிகளில் வீட்டு வசதிகள் மற்றும் அடிப்படை உள்கட்டமைப்புகளை மேம்படுத்த எனது அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**199.** பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின் (நகர்ப்புறம்)- பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தற்போது கட்டப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ள 2,428 வீடுகள் நடப்பு நிதியாண்டில் கட்டி முடிக்கப்படும். மேலும், பிரதம மந்திரி வீட்டு வசதி (நகர்ப்புறம்) 2.0 திட்டத்தின்கீழ் 2026-27 ஆம் ஆண்டில் 3,000 புதிய பயனாளிகள் பயன்பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**200.** புதுச்சேரி ஜவஹர் நகரில் அமைந்துள்ள குடியிருப்புகளில் ₹ 4.96 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். சாவனப்பேட்டை, பெரியார் நகரில் ₹ 90 இலட்சம் செலவில் பல்நோக்கு மண்டபம் கட்டப்படும். காரைக்கால், கோவில்பத்து பகுதியில் ₹ 1.70 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம்,

குடியிருப்புகளில் சீரமைப்பு பணிகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தப்படும். ஏனாம், கனகலப்பேட்டா பகுதியில் வடிகால்களுடன் கூடிய உட்புற சாலைகள் மேம்படுத்தப்படும்.

**201.** 2026-27ஆம் ஆண்டில் நகர மற்றும் கிராம திட்டமிடல் துறைக்காக ₹ 130.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

**202.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தவும், பசுமை போக்குவரத்தை ஊக்குவிக்கவும் எனது அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

**203.** அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) 25 மின்சார பேருந்துகள் ஏற்கனவே இயக்கத்தில் கொண்டு வரப்பட்டு, இவ்வாட்சிப்பரப்பின் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

**204.** பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ், 15 ஸ்மார்ட் பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாசற்ற போக்குவரத்து வசதிக்காக 38 மின்சார ஆட்டோக்கள் கொள்முதல் செய்யப்பட்டு 10 ஆண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதுச்சேரி நகராட்சியிடம் இயக்குதலுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், ‘பிரதம மந்திரி மின்சார பேருந்து சேவை’ திட்டத்தின் கீழ் 75 மின்சார பேருந்துகளை இயக்க எனது அரசு திட்டமிட்டுள்ளது. இப்பேருந்துகளின் இயக்கத்திற்குத் தேவையான மின்னேற்றும் மற்றும் பேருந்து பணிமனை உள்கட்டமைப்பு வசதிகள் மேட்டுப்பாளையத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**205.** நகரங்களுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பான, வசதியான மற்றும் உயர்தரமான பொதுப் போக்குவரத்து சேவையை வழங்கவும், அரசு–தனியார் பங்களிப்புடன் வால்வோ (VOLVO) பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும். புதுச்சேரியிலிருந்து சென்னை, பெங்களூரு மற்றும் பிற முக்கிய நகரங்களை இணைக்கும் வழித்தடங்களில் இப்பேருந்துகள் இயக்கப்படும்.

**206.** புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தானியங்கி கட்டண வசூல் (Automated Fare Collection) மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகள் (Intelligent Transportation Systems) அறிமுகப்படுத்தப்பட்டு பொதுப் போக்குவரத்து சேவைகள் நவீனப்படுத்தப்பட உள்ளன. மேலும், நகரங்களுக்கு இடையேயான இணைப்பையும் பயணிகளின் வசதியையும் மேம்படுத்தும் வகையில் 10 Semi-Deluxe பேருந்துகள் மற்றும் 10 குளிரூட்டப்பட்ட Deluxe பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்.

**207.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு முழுவதும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டையும், மின்சார வாகன மின்னேற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து கொள்கை செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாசுபாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் வாகன அகற்றும் கொள்கையும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**208.** 2026-27ஆம் ஆண்டில் போக்குவரத்துத் துறைக்காக ₹ 79.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**209.** பெண்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்தையும், குழந்தைகளின் ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் முழுமையான வளர்ச்சியையும் உறுதி செய்வதில் எனது அரசு தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்கள் ஆரோக்கியமாகவும், கண்ணியத்துடனும் வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**210.** புதுச்சேரி முதியோர் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 1,96,616 பயனாளிகளுக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் அனைத்து பிரிவினருக்கும் வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ₹ 500 உயர்த்தப்பட்டு வழங்கி வருவதை மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் அறிவர்.

**211.** மேலும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத் தலைவி பெண்களுக்கு மாதாந்திர நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை ₹ 1,000-லிருந்து ₹ 2,500-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 63,000 பெண்கள் பயனடைந்து வருகின்றனர். இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து தகுதியான வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத் தலைவிகளையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

**212.** மிஷன் சக்தி திட்டத்தின்கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், விதவைகளின் மகள்கள், ஒரே பெண் குழந்தை மற்றும் புதிதாகப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கான நிதியுதவி திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், ஊட்டச்சத்து மேம்பாடு,

அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களின் மதிப்பூதியத்தை உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் அங்கன்வாடி சேவைகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

**213.** குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறுவாழ்வை உறுதி செய்யும் வகையில் பல்வேறு குழந்தைகள் நலன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், குழந்தைகள் உதவி எண் சேவைகள், ஏற்பாதரவு மற்றும் வளர்ப்பு பாதுகாப்பு உதவிகள், நிறுவன பராமரிப்பு மற்றும் தத்தெடுப்பு சேவைகள் ஆகியவை குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலனை பாதுகாக்கும் வகையில் மேலும் வலுப்படுத்தப்படும்.

**214.** 2026-27ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைக்காக ₹ 1,072.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது**

**215.** அரசின் நிர்வாகத் திறனை மேலும் மேம்படுத்தவும், அரசின் பல்வேறு சேவைகளை பொதுமக்களுக்கு தடையின்றி வழங்கவும், கடந்த மூன்று ஆண்டுகளில் 3,099-க்கும் மேற்பட்ட

பணியிடங்கள் நிரப்பப்பட்ட நிலையில், நடப்பு நிதியாண்டில், இளநிலைப் பொறியாளர், மேல்நிலை எழுத்தர், இளநிலை எழுத்தர் உள்ளிட்ட மொத்தம் 957 நிரந்தர பணியிடங்களை நிரப்ப எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் ₹ 50 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

**216.** மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில், NEET மற்றும் JEE போன்ற தேசிய அளவிளான போட்டித் தேர்வுகளுக்காக மாணவர்கள் தங்களது கற்றல் திறன்களை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக கையடக்கக் கணினி (Tablet PC) இந்த நிதியாண்டு முதல் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 16,250 மணவர்கள் பயன்பெறுவர். இதன் மூலம் அரசுக்கு கூடுதலாக ₹ 16.25 கோடி செலவீனம் ஏற்படும்.

**217.** சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில், அவரகளுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ₹ 15,000-லிருந்து ₹ 25,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு கூடுதலாக ₹ 6.46 கோடி செலவீனம் ஏற்படும்.

**218.** பெண்களின் சமூகப் பாதுகாப்பையும், பொருளாதார நலனையும் வலுப்படுத்தும் நோக்கில் தற்போது திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்த எனது அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி, (i) வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களின் திருமணத்திற்கான நிதியுதவி ₹ 35,000-லிருந்து ₹ 75,000 ஆகவும் ; (ii) ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவையின் மகளின் திருமணத்திற்கான நிதியுதவி ₹ 40,000-லிருந்து ₹ 1,00,000 ஆகவும்; (iii) விதவையின் மறுமணத்திற்கான நிதியுதவி ₹ 75,000-லிருந்து ₹ 1,00,000 ஆகவும் மற்றும் (iv) ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கான திருமண நிதியுதவியை ₹ 1,00,000-லிருந்து ₹ 1,25,000 ஆகவும் இந்த நிதியாண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு கூடுதலாக ₹ 4.90 கோடி செலவீனம் ஆகும்.

**நிறைவுரை**

**219.** இவ்வரவு-செலவுத் திட்டம், மக்களின் எதிர்பார்ப்புகளையும், இவ்வாட்சிப்பரப்பின் வளர்ச்சித் தேவைகளையும் கருத்தில் கொண்டு உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், சுற்றுலா, வேளாண்மை, மீன்வளம், சமூக நலன் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்ட முக்கியத் துறைகளின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளித்து தயாரிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின்

அனைத்து தரப்பினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அரசின் உறுதியான நோக்கத்தை இவ்வரவு – செலவுத் திட்டத்தின் ஒவ்வொறு அறிவிப்பும் பிரதிபலிக்கிறது.

**220.** வளர்ச்சிக்கான முதலீடுகளைத் தொடர்ந்து உறுதிப்படுத்துவதோடு, நிதி ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதிலும் எனது அரசு உறுதிபூண்டுள்ளது. வருவாய் ஆதாரங்களை விரிவுபடுத்துதல், வரி மற்றும் வரியில்லாத வருவாயை மேம்படுத்துதல், பொதுச் செலவினங்களின் செயல் திறனை உயர்த்துதல் மற்றும் நிதி மேலாண்மையை மேலும் வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம், எதிர்கால ஆண்டுகளில் வருவாய் பற்றாக்குறையை படிப்படியாகக் குறைத்து நிலையான நிதி நிலையை எட்டுவதற்கு அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின் மூலம் புதுச்சேரியை வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றுவதே அரசின் இலக்காகும்.

**221.** இந்த நிறைவுரையுடன், 2026–27ஆம் நிதி ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தை இந்த மேலான பேரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

***வாழ்க பாரதம் !***

***வெல்க புதுச்சேரி !!***

***நன்றி ! வணக்கம் !!!***



வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.
வெளியிட்டோர் : நிதித்துறை, புதுச்சேரி – 605 001.